## ஹங்குரங்கெத பிரதேச சபை
## நுவரஎலிய மாவட்டம்

------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

## 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 ஏப்ரல் 08 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 ஏப்ரல் 07 ஆந் திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 ஆகஸ்ட் 19 ஆந் திகதி செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

## 1.2 அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக்கூற்றுக்களில் 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ஹங்குரங்கெத பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயற்பாடுகளும் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்

## 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) மீளாய்வாண்டிற்கான முத்திரைக் கட்டணம் ரூபா 456,080 தொகையான முத்திரைக் கட்டணத்தை கணக்கீடு செய்திருக்கவில்லை.

(ஆ) ஆண்டிற்கான மொத்த வீத வரிப் பெறுவனவுகள் ரூபா 1,586,226 தொகை எனினும் அவை ரூபா 1,599,917 தொகை என கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டிற்கான ஓய்வூதியப் பங்களிப்புத் தொகையின் பெறுமதி ரூபா 106,106 தொகை எனினும் அவை வருமானச் செலவுக் கணக்கில் ரூபா 237,526 தொகை என ரூபா 131,420 இனால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிர்மாணவேலை கடன்பட்டோரின் பெறுமதி ரூபா 775,000 தொகையினால் அதிகரித்துக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(உ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கடன்கொடுத்தோர் ரூபா 190,197 தொகையினால் அதிகரித்துக் கணக்கிடப்பட்டுள்ளது.

(ஊ) 2015 ஆண்டின் போது நிரந்தர ஊழியர்களுக்கு செலுத்தியிருந்த ரூபா 2,797,971 தொகையான மீளளிப்புச் செய்யப்படாத சம்பளத் தொகையைக் கடன்பட்டோர் என கணக்கீடு செய்திருக்கவில்லை.

(எ) 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு வங்கி இணக்கக் கூற்றின் பிரகாரம் ரூபா 16,000 இற்கான செலவினை இனங்கண்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்காமையால் திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு காசு மீதி அதே தொகையால் அதிகரித்தும் ஆண்டிற்கான செலவுகள் அதே தொகையால் குறைவாகவும் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன.

(ஏ) 02 வருடங்களுக்கு மிகையான காலம் முதல் வங்கி இணக்கக் கூற்றில் காட்டப்பட்டுள்ள காசேட்டில் பதிவு செய்யப்பட்டிருக்காத பெறுவனவுகள் ரூபா 294,666 தொகையினை இனங்கண்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

04 கணக்கு விடயங்கள் தொடர்பாக கட்டுப்பாட்டுக் கணக்குகளின் பிரகாரம் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 96,452,159 தொகை மற்றும் துணைப் பதிவேடுகள் மற்றும் அறிக்கைகளின் பிரகாரம் கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 65,827,442 ஆக காணப்பட்டிருந்தமையால் ரூபா 30,624,717 தொகைக்கான வித்தியாசம் ஒன்று காணப்பட்டது.

### 1.3.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

#### (i) பெறவேண்டிய கணக்குகள்

2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிர்மாணவேலை கடன்பட்டோர் மீதி ரூபா 49,626,114 தொகையாகக் காணப்பட்டதுடன், அவற்றில் ஒரு வருட காலத்தை மிகைத்திருந்த மீதிகளின் பெறுமதி ரூபா 38,346,569 தொகையாகும். இந்தப் பணம் மத்திய அரசில் இருந்து கிடைக்க வேண்டிய நிதி ஏற்பாடாக காணப்பட்டதுடன் அவை கிடைக்கக் கூடியதற்கான சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

#### (ii) செலுத்த வேண்டிய கணக்குகள்

செலுத்த வேண்டியிருந்த கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 34,570,651 ஆகக் காணப்பட்டதுடன் அவற்றில் 01 வருட காலத்தை மிகைத்திருந்த செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 23,166,649 ஆக இருந்தது.

### 1.3.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதி நிலைமைக் கூற்றில் காட்டப்பட்டிருந்த ரூபா 49,668,615 பெறுமதியான 02 கணக்கு விடயங்கள் தொடர்பாக சான்றுகள் சமர்ப்பிக்கப்பட்டமையால் கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதி செய்வதற்கு முடியாதிருந்தது.

### 1.3.5 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள்

கீழே காணப்படும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மை சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|
| (அ) பிரதேச சபை (நிதி நிருவாக) விதி இலக்கம் 218 | சபையின் காணி மற்றும் கட்டிடங்கள் தொடர்பாக வருடாந்தப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. |
| (ஆ) இலங்கை குடியரசின் நிதிப் பிரமாணம் 571 | ரூபா 912,509 தொகை பெறுமதியான 102 வைப்புக்கள் தொடர்பாக உரிய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (இ) | அரச தாபனக் கோவையின் XXIV ஆம் அத்தியாயம் | ஓய்வுபெற்றுள்ள/ இறந்துள்ள/ சேவையை விட்டுச் சென்றுள்ள/ இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ள அலுவலர்களின் ரூபா 174,512 தொகையான கடன்மீதியை அறவீடு செய்திருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பித்திருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2015 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 1,872,765 ஆக இருந்ததுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினை விஞ்சிய வருமானம் ரூபா 144,613 ஆகக் காணப்பட்டமையால் நிதி விளைவுகள் ரூபா 1,728,152 தொகை முன்னேற்றமொன்று காணப்பட்டது.

### 2.2 பகுப்பாய்வு ரீதியாக நிதி மீளாய்வு

நிதி விளைவுகளின் முன்னேற்றத்திற்கு 05 வருமான விடயங்களில் அதிகரிப்பு மற்றும் 05 செலவு விடயங்களில் குறைவடைதலும் முக்கியமாகத் தாக்கியிருந்தது.

### 2.3 தொழிற்படு மூலதன முகாமைத்துவம்

மொத்த நடைமுறை சொத்துக்களுடன் நடைமுறை பொறுப்புக்களைப் பரிசோதனை செய்த போது, நடைமுறை விகிதாசாரம் 1.43:1 தொகையாகக் காணப்பட்டதுடன் உச்சமட்டத்தை விட குறைவாக இருந்தது என அவதானிக்கப்பட்டது. நடைமுறை சொத்துக்களில் 74 சதவீதமும் நிலுவை நிர்மாணவேலை உதவி நிதியாகக் காணப்பட்டதுடன் நடைமுறை பொறுப்புக்களில் 76 சதவீதம் நிர்மாணவேலை கடன்கொடுத்தோர் அடங்கியிருந்தது.

### 2.4 வருமான நிருவாகம்

#### 2.4.1 வருமானம் சேகரித்தல் செயலாற்றுகை

செயலாளரினால் மீளாய்வாண்டிற்காக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம் உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் பற்றிய தகவல்கள் பின்வருமாறு.

| வருமான விடயம் | 2015.01.01 திகதியில் உள்ளவாறு நிலுவை | 2015 ஆண்டின் போது சிட்டையிடல் | ஆண்டின் போது பெறுவனவு<br>2014 ஆண்டின் நிலுவையில் | ஆண்டின் போது சிட்டையிட் டவைகளில் அறவீடுகள் | 2015.12.31 திகதியில் நிலுவை<br>2015.01.01 திகதியில் உள்ளவாறு நிலுவையாக இருந்தது | ஆண்டின் போது சிட்டையிட்ட வைகளில் | மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. |
| வீதவரி | 2,160,712 | 1,983,687 | 733,615 | 852,611 | 1,472,097 | 1,131,076 | 2,603,173 |
| வாடகை | 1,529,124 | 2,373,687 | 83,470 | 1,668,838 | 1,445,654 | 1,209,722 | 2,655,376 |
| நீர்க் கட்டணம் | 948,741 | 3,215,515 | 280,750 | 2,789,845 | 667,991 | 425,670 | 1,093,661 |

### 2.4.2 வீத வரி

வருட ஆரம்பத்தில் காணப்பட்ட நிலுவைத் தொகையில் 33 சதவீதம் மற்றும் ஆண்டிற்கான சிட்டையிடப்பட்டவைகளில் 42 சதவீதமும் வீதவரி அறவிடப்பட்டிருந்ததுடன் ஆரம்ப நிலுவையில் ரூபா 1,427,097 தொகை உட்பட மீளாய்வாண்டு இறுதியில் ரூபா 2,603,173 தொகை நிலுவைத் தொகையை அறவீடு செய்வதற்கு 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 158 ஆம் பிரிவின் பிரகாரம் செயற்பட்டிருக்கவில்லை.

### 2.4.3 வாடகை

சபைக்குச் சொந்தமான கடைகளை வாடகைக்கு கொடுத்ததன் மூலம் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு ரூபா 2,655,376 தொகை வருமானம் ஒன்று அறவிடப்பட வேண்டியிருந்ததுடன் முறையான உடன்படிக்கைகள் இன்மையால் பண அறவீடு தொடர்பாக சிக்கல்கள் காணப்படுகின்றன.

### 2.4.4 வர்த்தக அனுமதிப்பத்திரக் கட்டணம்

1988 இன் பிரதேச சபை (நிதி நிருவாக) விதி 59-61 இன் பிரகாரம் ஆண்டு ஆரம்பத்தில் முறையான கணிப்பீடு ஒன்றின் மூலம் அனைத்து வியாபாரிகளின் பெயர்களும் அனுமதிப்பத்திர பதிவேட்டுக்கு உட்படுத்தியிருந்த போதிலும், 2015 ஆண்டிற்கான 74 வர்த்தகங்கள் தொடர்பாக ரூபா 51,300 தொகை அனுமதிப்பத்திரக் கட்டணம் அறவீடு செய்திருக்கவில்லை.

### 2.4.5 ஏனைய வருமானங்கள்

#### (அ) ஏக்கர் வரி

2015 ஆண்டின் ஆரம்பத்தில் காணப்பட்ட நிலுவை ஏக்கர் வரி ரூபா 96,148 தொகை மற்றும் 2015 ஆண்டிற்கான சிட்டையிடப்பட்டவைகளில் ரூபா 20,727 நிலுவை உட்பட ரூபா 116,875 இற்கான நிலுவை ஏக்கர் வரி அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது.

#### (ஆ) வாகனங்கள் நிறுத்தி வைத்தல் கட்டணம்

பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தில் வாடகை வாகனங்கள் நிறுத்தி வைப்பதற்காக துணை விதிகள் ஆக்கப்பட்டிருந்த போதிலும் சபையினால் பல்வேறு வாடகை வாகனங்களுக்காக வாகனத் தரிப்பிடங்கள் பராமரிக்கப்பட்டு அதற்காக இடங்கள் அடையாளமிட்டு முறையாக வாடகை ஒன்றை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 2.4.6 நீதிமன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 183,372 தொகையும் முத்திரைக் கட்டணம் ரூபா 6,456,080 தொகை கிடைக்க வேண்டியிருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்பாட்டுத் திறமையின்மை

சபையின் நீர்ச் செயற்திட்டத்தின் மீண்டுவரும் வருமானம் ரூபா 3,081,932 தொகையாகக் காணப்பட்டதுடன் செலவுகள் ரூபா 3,394,948 தொகையாகக் காணப்பட்டமையினால் ரூபா 313,016 தொகைக்கான பற்றாக்குறையொன்று ஏற்பட்டிருந்தது.

## 3.2 முகாமைத்துவத் திறமையின்மை

2008 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு வங்கி இணக்கக் கூற்றில் காட்டப்பட்டிருந்த ரூபா 25,575 இனங்காணப்படாத வித்தியாசம் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதி வரை தீர்த்திருக்கவில்லை.

## 3.3 சுற்றாடல் சார் சிக்கல்கள்

1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சார் சட்டத்தின் 23(அ)ஆம் பிரிவின் கீழ் 2008 ஜனவரி 25 திகதிய சுற்றாடல் சார் இயற்கை மூலவளங்கள் அமைச்சரினால் வெளியிடப்பட்ட 1533/16 கொண்ட அதிவிஷேட வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் அனுமதிப்பத்திரம் பெறவேண்டிய 04 வர்த்தக நிலையங்களுக்கு வழங்கியிருந்த அனுமதிப்பத்திரம் செல்லுபடியாகும் காலம் முடிவடைந்திருந்த போதிலும் அவ் அனுமதிப்பத்திரங்களை புதுப்பித்திருக்கவில்லை.

# 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

## 4.1 கூட்டிணைந்த திட்டம்

மீளாய்வாண்டு உட்படக் கூடிய விதமாக கூட்டிணைந்த திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

(அ) மீளாய்வாண்டிற்காக தயாரிக்கபட்டிருந்த பாதீட்டின் படி மதிப்பீட்டு வருமானம் மற்றும் செலவுகள், உள்ளவாறான வருமானம் மற்றும் செலவுகளுடன் இணக்கஞ் செய்யும் போது 08 வருமான விடயங்களில் 18 சதவீதம் முதல் 260 சதவீதம் வரையும் 11 செலவு விடயங்களில் 17 சதவீதம் முதல் 160 சதவீதம் வரையும் முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமாக கட்டுப்பாட்டு கருவி ஒன்றாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதி இலக்கம் 193 இன் பிரகாரம் பாதீட்டு நிதி ஏற்பாடுகள் குறைநிரப்புடன் ஒப்பீடு செய்து ஒவ்வொரு வரவு/ செலவு விடயங்களில் மிகை/ பற்றாக்குறை பற்றிய விடயங்கள் தெளிவாக்கும் கூற்றொன்று தயாரிக்கப்பட்டு சமர்ப்பித்திருக்கவில்லை.

## 4.3 வருடாந்த பெறுகைகள் திட்டம்

மீளாய்வாண்டின் போது ரூபா 81,135,522 தொகையினை மூலதனச் செலவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் அரச பெறுகைகள் வழிகாட்டல் கோவையில் உப பந்தி 4.2 இன் பிரகாரம் வருடாந்த பெறுகைகள் திட்டம் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 4.4 உள்ளகக் கணக்காய்வு

இலங்கை குடியரசின் நிதிப் பிரமாணங்கள் 133 மற்றும் 2009 ஜுன் 09 திகதிக்கு இலக்கம் டீஎம்ஏ/2009/01 கொண்ட முகாமைத்துவத் திணைக்களச் சுற்று நிருபத்தின் பிரகாரம் நிறுவனத்தில் போதியளவு உள்ளகக் கணக்காய்வு ஒன்று காணப்படவில்லை.

**4.5 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**விளைவற்ற குறைவாகப் பயன்படுத்தப்படும் சொத்துக்கள்**

(அ) பிரதேச சபைக்குச் சொந்தமான CPGM-2240 கொண்ட நீர்பவுசர் 2015 வருட ஆரம்பம் முதல் எதுவித தேவைக்கும் பயன்படுத்தப்படாமல் சபை வளவில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

(ஆ) வருடாந்த பண்டக் கணிப்பீடு

மீளாய்வாண்டிற்காக பண்ட மெய்மையாய்தல் ஒன்று நடாத்தப்பட்டிருக்கவில்லை.

**5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பாக விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) வருமான நிருவாகம்
(ஆ) சொத்துக்கள் முகாமைத்துவம்
(இ) கடன்பட்டோர் கடன்கொடுத்தோர் கட்டுப்பாடு